பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

27 11 2024
புதன்கிழமை

12 40
பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நான்கு நாள் பயணமாக தமிழகம் வந்துள்ளார். வெலிங்டன் ராணுவ பயிற்சிக் கல்லூரி நிகழ்ச்சியில் நாளை அவர் கலந்து கொள்கிறார்.
2. எதிர்க்கட்சிகளின் கடும் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்றும் ஒத்திவைக்கப்பட்டன.
3. இந்தோ – பசிபிக் மண்டலத்தில் அரசியல், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் எதிர்பார்ப்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாகடர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் காவலர் பணிக்கு தெரிவு செய்யப்பட்ட மூவாயிரத்து 359 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் வழங்கினார்.
5. தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கே 370 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று காலை கோவை வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் வரவேற்றார்.

அங்கிருந்து உதகமண்டலம் செல்லும் குடியரசுத் தலைவர், குன்னூர் வெலிங்டனில் உள்ள ராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் நாளை பங்கேற்கிறார்.

நாளை மறுநாள் பழங்குடியின மக்களிடையே கலந்துரையாடும் குடியரசுத் தலைவர், மகளிர் சுய உதவிக்குழுவினரையும் சந்தித்து பேசுகிறார்.

வரும் சனிக்கிழமை கோயம்புத்தூர் செல்லும் குடியரசுத் தலைவர், அங்கிருந்து திருவாரூர் செல்கிறார்.

அங்குள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்கவுள்ளார்.

குடியரசுத் தலைவரின் வருகையையொட்டி நீலகிரி மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மணிப்பூர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்றதி.ன் இரு அவைகளும் இன்று நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவை இன்று தொடங்கியபோது காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்துக்கு எதிராக லஞ்ச ஊழல் முறைகேடு குறித்து கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பாக அவையில் விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று வலியுறுத்தினர்.

உத்திரபிரதேச மாநிலம் சம்பல், மணிப்பூர் வன்முறை சம்பவங்கள் குறித்தும் விவாதிக்க வேண்டுமென்று வலியுறுத்தினர்.

அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா கேள்வி நேரத்துக்குப் பிறகு இப்பிரச்சினை குறித்து விவாதிக்கலாம் என்று கூறினார்.

ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதனால் அவைந ண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நிலைமை சீரடையாததால் இன்று நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதே பிரச்சினையை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

அவையின் கண்ணியத்தை காக்க ஒத்துழைப்பு தருமாறு அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் வேண்டுகோள் விடுத்தார்.

உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதாதல் மாநிலங்களவையும் இன்று நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

முதுபெரும் கலைஞர்களுக்கு மத்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் ஓய்வூதியம் உள்ளிட்ட நிதி உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் இன்று மக்களவையில் தெரிவித்தார்.

கடந்த 2021-ஆம் ஆண்டு முதல் நடப்பு நிதி ஆண்டின் இம்மாதம் 21-ஆம் தேதி வரை முதுபெரும் கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட நிதி உதவி குறித்த பட்டியலை அவர் அவையில் வெளியிட்டார்.

கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு முதுபெரும் கலைஞர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நாடு முழுவதும் ஏழாயிரத்து 333 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக ஒடிஸா மாநிலத்தில் இரண்டாயிரத்து 49 பேருக்கும், மகாராஷ்டிராவில் ஆயிரத்து தொள்ளாயிரத்து 95 பேருக்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இந்த திட்டத்தின் கீழ 264 முதுபெரும் கலைஞர்கள் பயன்பெற்றுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தனியார் பள்ளிகளின் நிதி நிர்வாகம், தணிக்கை உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மாநில அரசுகளுக்கு உள்ளதாக இன்று மத்திய அரசு மக்களவையில் தெரிவித்தது.

இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு மத்திய கல்வித்துறை இணை அமைச்சர் திரு ஜெயந்த் சௌத்திரி எழுத்து பூர்வமாக அளித்த பதிலில், பள்ளிகள் குறித்த அனைத்து விவரங்களும் மாநில அரசுகளின் கல்வித்துறையின் பொறுப்பில் உள்ளதாக கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தோ – பசிபிக் மண்டலத்தில் அரசியல், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் எதிர்பார்ப்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாகடர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் **Fiuggi** – நகரில் ஜி-ஏழு வெளியுறவுத்துறை அமைச்சர்களின் அரசியல் அணுகுமுறை குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், குவாட் அமைப்பு நாடுகள் பொருளாதார ரீதியாக நல்ல முன்னேற்றம் கண்டு வருவதாகக் கூறினார்.

இந்தோ - பசிபிக் நாடுகளுடன் குவாட் நாடுகள் ஒத்துழைப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடல்சார் ஒத்துழைப்பு, செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றில் இந்த நாடுகள் மிகுந்த பொறுப்புடன் செயல்பட வேண்டியது அவசியமாகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நாடுகளின் கடன் சுமை அதிகரிக்காத வகையில் இருக்கும் வளங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

சிறந்த அரசு நிர்வாகம், வலுவான மருத்துவ கட்டமைப்பு, தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவை இந்த மண்டலத்தின் வளர்ச்சிக்கு அவசியமாகிறது என்றும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ள மூவாயிரத்து 359 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் வழங்கினார்.

அப்போது பேசிய அவர், சைபர் குற்றம், போதைப்பொருள் பயன்பாடு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

குற்றவாளிகளை கைது செய்வதைவிட, குற்றசங்கள் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார்.

ஜாதி சமய வேறுபாடுகளைக் கடந்து மக்களோடு நல்லிணக்கத்துடன் செயல்பட்டு தங்களது கடமையை ஆற்ற வேண்டுமென்றும் முதலமைச்சர் காவல்துறையினரை கேட்டுக்கொணடார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -50- செகண்ட்*

**[]<<<>>>[]**

அஇஅதிமுக-வின் செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் அடுத்த மாதம் 15-ஆம் தேதி சென்னையை அடுத்த வானகரத்தில் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

கட்சியின் அவைத்தலைவர் டாக்டர் தமிழ் மகன் உசேன் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொள்வார்கள் என்று கட்சியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு வடமேற்கு திசையில் 13 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னைக்கு தெற்கு தென்கிழக்கே 550 கிலோமீட்டர் தொலைவிலும், நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கே 370 கிலோ மீட்டர் தூரத்திலும், புதுச்சேரிக்கு தென்கிழக்கே 470 கிலோமீட்டர் தொலைவிலும் இது மையம் கொண்டுள்ளது.

இது மேலும் தீவிரமடைந்து வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 12 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வடக்கு வடமேற்கு திசையில் தமிழக கடற்கரை மற்றும் இலங்கையையொட்டி அடுத்த இரண்டு நாட்கள் நகர்ந்து செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சென்னை, கடலூர், நாகப்பட்டினம், எண்ணூர் மற்றும் பாம்மன் துறைமுகங்களில் மூன்றாம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, புதுக்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழைக்கான வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரி, காரைக்கால், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், நீலகிரி, கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாகப்பட்டினம், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, தேனி, திருவாரூர், தூத்துக்குடி, விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடல் கொந்தளிப்பாக காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

நாகை மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் மேலும் மூன்று நாட்களுக்கு பனிப்பொழிவு நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஆங்காங்கே மழைக்கான வாய்ப்பும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி மாலை மணி 4-45-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு – கொல்கத்தா அணிகள் மோதுகின்றன.

***End of News***